# அன்பின் பலியாய் ஏற்பாய்

அன்பின் பலியாய் ஏற்பாய்
எம்மை அணுகிடும் எளியவர்
வேண்டுதல் கேட்பாய் - 2
அன்பின் பலியாய் ஏற்பாய்
புண்படும் மனதின் துயர்தீர்ப்பாய் -எம்மை
புண்ணிய வாழ்வில்
நிலைபெறச் செய்வாய்

(அன்பின்)

**1)**
வாழ்வின் கொடைகள் பெறுகின்றோம்
அருள் வள்ளலுன் கருணையில் வாழ்கின்றோம்
முழுமுதல் தலைவா இறைஞ்சுகின்றோம்
எம்மைத் திருப்பலிப் பொருளாய்த் தருகின்றோம்

(அன்பின்)

**2)**
படைப்பின் மீதே பரிவிருக்க - அந்தப்
பரிவால் உம்மகன் உயிர் கொடுக்க
படைப்பே உம்மால் மகிழ்ந்திருக்க - உம்மில்
படைத்தோம் தூய்மை நிறைந்திருக்க

(அன்பின்)